செ.வெ.எண் : 22/ ஜூலை நாள் : 10.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெறும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு தொகுப்பு மானியம் வழங்கப்படவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெறும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கவும், இராணுவப் பணி பயிற்சி காலத்தின் போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ளவும் தொகுப்பு நிதியிலிருந்து தொகுப்பு மானியம் வழங்கப்படவுள்ளது. என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இராணுவப் பணியில் படை அலுவலர் / குறுகிய கால படை அலுவலர் / இளநிலை படை அலுவலர் / இதர பதவிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெறும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கவும், இராணுவப் பணி பயிற்சி காலத்தின் போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ளவும் தொகுப்பு நிதியிலிருந்து தொகுப்பு மானியம் வழங்கப்படவுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகள் 01.04.2016-க்கு பின்னர் இராணுவப் பணியில் படை அலுவலர் / குறுகிய கால படை அலுவலர் / இளநிலை படை அலுவலர் / இதர பதவிகளில் பதவிகளுக்கு தேர்வு செய்யப்பட்டு, இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தால், முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர் அலுவலகத்தை நேரில் அணுகி உரிய படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்து தொகுப்பு மானியம் பெற்று பயனடையலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**